~~16988~~

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்,
110, அண்ணா சாலை, சென்னை–2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: முனைவர் சி.பாலசுப்பிரமணியன்,
இணை இயக்குநர் (பொ)

அரசு மைய அச்சகம் தபால் பிரிவு 13 SEP 2022 சென்னை–600 001

ஆணையரக இ1/6840/2020 நாள் 26.08.2022

பொருள் பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம் சென்னை–2 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2018–2019, மற்றும் 2019–2020ம் ஆண்டில் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற 03 நபர்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு இளநிலை உதவியாளர்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது –03 நபர்களின் தற்காலிக பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை

1 செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடித எண்.2465/PSD-1 /2020 நாள் 26.05.2020

2 ஆணையரக செ.மு.ஆணை எண்.இ1/6840/2020 நாள் 07.08.2020

3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடித எண்.2465/PSD-1 /2020 நாள் 18.10.2021

4. ஆணையரக செ.மு.ஆணை எண்.இ1/6840/2020 நாள் 10.12.2021

-------

பார்வை 3–ல் காணும் 18.10.2021 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடிதத்தின்படி 2018–2019, மற்றும் 2019–2020ம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி–IV தேர்வில் தேர்ச்சிப் பெற்ற ரா.ஐயனார் உள்ளிட்ட 03 நபர்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை–4ல் காணும் 10.12.2021 நாளிட்ட ஆணையரக செயல்முறை ஆணையின்படி எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையை சார்ந்த அரசு மைய அச்சகம், சென்னை–1ல் தற்காலிகமாக இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) மேற்கண்ட தற்காலிக இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்கண்ட அட்டவணை-ல் குறிப்பிடப்பட்டுள்ள 03 நபர்கள் அவர்களின் பெயருக்கெதிரே கலம் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள அலகிலும் மற்றும் கலம்-4ல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணியில் சேர்ந்து இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

அட்டவணை

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணியமர்த்தப்பட்ட அலகு | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ரா.ஐயனார்<br>இளநிலை உதவியாளர் | அரசு மைய அச்சகம் சென்னை-1. | 15.12.2021 மு.ப |
| 2. | அ.அழகுமணிவேலு<br>இளநிலை உதவியாளர் | அரசு மைய அச்சகம் சென்னை-1. | 17.12.2021 மு.ப |
| 3. | செ.விஜயகுமார்<br>இளநிலை உதவியாளர் | அரசு மைய அச்சகம் சென்னை-1. | 20.12.2021 மு.ப |

3. பார்வை 1-ல் காணும் 26.05.2020 நாளிட்ட, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதத்தில், பத்தி எண் 5 ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to recruitment to the post included in Combined Civil Services Examination-IV for the year 2018-2019, and 2019-2020 ".

4. மேற்குறிப்பிட்ட 26.05.2020 நாளிட்ட, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதத்தில், பத்தி எண் 5ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி மேலே குறிப்பிடப்பட்டுள்ள 03 தற்காலிக இளநிலை உதவியாளர்களின், பணியினை, மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2018-2019, மற்றும் 2019-2020ம் ஆண்டிற்கான குரூப்-IV பணியாளர் தேர்வு குறித்த வழக்கின் (writ petition) தீர்ப்பிற்கு உட்பட்டு மேலே பத்தி-3ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பத்தி 2ல் காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மேற்காணும் 03 நபர்களின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை மேலே அட்டவணையில் அவரவர் பெயருக்கெதிரே கலம் 4ல், குறிப்பிட்டுள்ள நாளான இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த

நாள் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல், இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான, மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும் மற்றும் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும், ஆணையிடப்படுகிறது.

சி.பாலசுப்பிரமணியன்
இணை இயக்குநர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்–பணிமேலாளர், அரசு மைய அச்சகம் சென்னை–1 மூலமாக

நகல் பெறுநர்
1) பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–1
2) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை–1.
3) ஆணையரின் நேர்முக உதவியாளர், ஆணைரயகம் சென்னை–2.
4) கண்காணிப்பாளர் 'இ' / இ2 இளநிலை உதவியாளர் மற்றும் 'இ3' உதவியாளர், ஆணையரகம், சென்னை–2.
5) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை–3 தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
6) உதிரி – 3 நகல்கள்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

ஆணையரின் நேர்முக உதவியாளர்

மே.கு.ம.அ.எண் அ2/18645/2022
நாள் 9/2022
பார்வை :- ஆணையரக செ.மு.க.எண் இ1/6840/2020 நாள் 26.8.2022
நகல் வழங்கப்படுகிறது

உதவி இயக்குநர் (பணி)
அரசு மைய...
சென்னை–...

3/6

பெறுநர் :
1. திரு.ரா. ஐயனார்,
இ.நி.உ,
அ.ம.அ, செ.1